# அசுத்தமான உணவகங்களுக்கான

## லைசென்ஸ்சுகள் புதுப்பிக்கப்படாது

கோலாலம்பூர், செப். 29 –
தங்களின் வர்த்தக இடங்களை சுத்தமாக வைத்திருக்க, சம்பந்தப்பட்ட உணவகங்களின் உரிமையாளர்கள் தவறுவார்களேயானால், அவர்களின் வர்த்தக லைசென்ஸ்சுகள் புதுப்பிக்கப்படாது.அத்தகையோரின் உணவக லைசென்ஸ்சுகள் நிச்சயம் புதுப்பிக்கப்படாது என்று, கூட்டரசு பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா தீர்க்கமாகக் கூறினார்.



பக்கம் 13

## அசுத்தமான உணவகங்களுக்கான...

கோலாலம்பூர் மாநகரில் உள்ள வர்த்தக இடங்கள் குறிப்பாக, உணவகங்கள் சுத்தமாக இருப்பதைக் கண்காணிக்கும் அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, கோலாலம்பூர் மேயர் மைமுன்னா ஷரிஃபுக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் டாக்டர் ஸலிஹா தெரிவித்தார். "வர்த்தகம் புரியப்படும் இடங்களின் சுத்தம் மனநிறைவு அளிக்காமல் இருந்தால், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களின் லைசென்ஸுகளை நாங்கள் புதுப்பிக்க மாட்டோம்" என்று, உலக சுகாதார தினத்தை முன்னிட்டு கோலாலம்பூரில் நேற்று சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மிகப் பெரிய தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சியில் பேசும்போது டாக்டர் ஸலிஹா தெரிவித்தார்.

இவ்வாண்டு ஜூலை மாதம் வரையில், நிர்ணயிக்கப்பட்டுள்ள தூய்மை தரத்தைப் பின்பற்றத் தவறிய, கோலாலம்பூரில் உள்ள மொத்தம் 417 உணவகங்களை மூடுமாறு உத்தரவிடப்பட்டதாகவும் அவர் கூறினார்.